

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களை நேற்று (4.12.2024) தலைமைச் செயலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் சந்தித்து, புதுதில்லியில் 30.11.2024 அன்று நடைபெற்ற இந்திய வர்த்தகம் மற்றும் தொழில் கூட்டமைப்பு சார்பில் FICCI Turf 2024 – 14வது சர்வதேச விளையாட்டு கருத்தரங்கில் 2024–ஆம் ஆண்டிற்கான இந்திய விளையாட்டு விருதுகள் வழங்கும் விழாவில், விளையாட்டை ஊக்குவிக்கும் சிறந்த மாநிலமாக (Best State Promoting Sports) தமிழ்நாடு தேர்வு செய்யப்பட்டு, அதற்கென வழங்கப்பட்ட விருதினை காண்பித்து வாழ்த்துப் பெற்றார். உடன் தலைமைச் செயலாளர் நா.முருகானந்தம், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் முனைவர். அதுல்ய மிஸ்ரா, தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணைய உறுப்பினர் செயலர் ஜெ.மேகநாத ரெட்டி ஆகியோர் உள்ளனர்.



கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை, போச்சம்பள்ளி ஆகிய தாலுகாவிற்கு உட்பட்ட பகுதிகளில் புயல் மழை வெள்ளம் காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ள பாதிப்புகள் குறித்து ஆய்வு செய்தும் பாதிக்கப்பட்ட மக்களை துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேரில் பார்வையிட்டு ஆறுதல் கூறி நலத்திட்ட உதவிகளை வழங்கினார். அங்கு மருத்துவ வசதிகள் குறித்தும் கேட்டறிந்தார். உடன் வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத் துறை அமைச்சர் சு.முத்துசாமி, மாவட்ட செயலாளர் தே.மதியழகன் எம்.எல்.ஏ., ஒய்.பிரகாஷ் எம்.எல்.ஏ., கிருஷ்ணகிரி மாவட்ட கண்காணிப்பு அலுவலர் சில்பா பிரபாகர், மாவட்ட ஆட்சித் தலைவர் சரயு, முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் இ.ஜி. சுகவனம், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் பி.முருகன், நரசிம்மன், மாவட்ட அவைத்தலைவர் நாகராஜ், மாநில மகளிர் ஆணைய உறுப்பினர் மருத்துவர் மாலதி நாராயணசாமி, மாநில இளைஞரணி துணை செயலாளர் சீனிவாசன், துணை செயலாளர்கள் சாவித்திரி கடலரசு மூர்த்தி, சந்திரன் மற்றும் பலர் உள்ளனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (4.12.2024) சென்னை, வால்டாக்ஸ் சாலையில் நடைபெற்ற நிகழ்ச்சியில், வடசென்னை வளர்ச்சித் திட்ட விரிவாக்கப் பணிகளின் கீழ், 1,383 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான அடிக்கல் மற்றும் திறப்பு விழாவில், வடசென்னை வளர்ச்சித் திட்டத்தின் கீழ் மேற்கொள்ளப்பட்டு வரும் பணிகள் குறித்து பல்வேறு துறைகளின் சார்பில் அமைக்கப்பட்ட புகைப்படக் காட்சியை பார்வையிட்டார். இந்நிகழ்வின்போது, துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், அமைச்சர்கள் தா.மோ.அன்பரசன், மா.சுப்பிரமணியன், பி.கே.சேகர்பாபு, மேயர் ஆர்.பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள், துணை மேயர் மு. மகேஷ் குமார், வீட்டுவசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித் துறை முதன்மைச் செயலாளர் காகர்லா உஷா, எரிசக்தி துறை முதன்மைச் செயலாளர் டாக்டர் பீலா வெங்கடேசன், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழும உறுப்பினர் செயலர் அன்சுல் மிஸ்ரா, பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் ஜெ.குமரகுருபரன், சென்னை பெருநகர் குடிநீர் மற்றும் கழிவுநீரகற்று வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் டி.ஜி.வினய், தமிழ்நாடு நகர்புற வாழ்விட மேம்பாட்டு வாரிய மேலாண்மை இயக்குநர் டாக்டர் எஸ்.பிரபாகர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் உடனிருந்தனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று (4.12.2024) தலைமைச் செயலகத்தில், திராவிடர் கழக பகுத்தறிவாளர் கழகத்தின் மாநில துணைத் தலைவர் முனைவர் நா. சுலோசனா சந்தித்து, தான் எழுதிய "திரைவானில் கலைஞர்" என்ற புத்தகத்தை வழங்கி, வாழ்த்து பெற்றார்.



தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை நேற்று (4.12.2024) திரைப்பட நடிகர் சிவகார்த்திகேயன் சந்தித்து ஃபெஞ்சல் புயல் கனமழையைத் தொடர்ந்து தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையிலான அரசு மேற்கொண்டு வரும் மீட்பு மற்றும் நிவாரண பணிகளுக்கு துணை நிற்கும் வகையில் "முதலமைச்சரின் பொது நிவாரண நிதிக்கு" 10 லட்சம் ரூபாய்க்கான காசோலையை வழங்கினார்.


